# பள்ளிக் கல்வித் துறை
# தஞ்சாவூர் மாவட்டம்
# ஆய்வக உதவியாளர் பணியிடத்திற்கான நேரடி நியமனம்

---

தஞ்சாவூர் மாவட்டத்தில் காலியாக உள்ள ஆய்வக உதவியாளர் பணியிடங்களுக்கான நேரடி நியமனத்திற்கு 31.05.2015 அன்று நடத்தப்பட்ட தேர்வின் முடிவுகள் 24.03.2017 அன்று அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, எழுத்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும், பணிநாடுநர்கள் விண்ணப்பித்தபோது அளித்த விவரங்கள் அடிப்பபடையிலும், நடைமுறையில் உள்ள இனசுழற்சி முறையினைப் பின்பற்றி, 1:5 என்ற விகிதத்தில், சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படுவோர் பட்டியல் வெளியிடப்படுகிறது.

சான்றிதழ் சரிபார்ப்பு 09.04.2017 மற்றும் 10.04.2017 ஆகிய நாட்களில் தஞ்சாவூர் தூய அந்தோணியார் மேல்நிலைப் பள்ளியில் (மேரீஸ் கார்னர் அருகில்) நடைபெற உள்ளது. சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொள்ளாதவர்களுக்கு மீளவும் வாய்ப்பு ஏதும் அளிக்கப்பட மாட்டாது.

இப்பட்டியல், பணிநாடுநர்கள் விண்ணப்பங்களில் தெரிவித்து இருந்த விவரங்களின் அடிப்படையில் மிகுந்த கவனத்துடன் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பட்டியலில் தவறுகள் ஏதேனும் கண்டறியப்படின் திருத்தத்திற்கு உட்பட்டது. சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அழைக்கப்படுதல் என்பது வேலைவாய்ப்பிற்கு உத்திரவாதம் அளிப்பதாக அமையாது.

இடம் – தஞ்சாவூர்

முதன்மைக் கல்வி அலுவலர்,

நாள் – 31.03.2017

தஞ்சாவூர்